(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(6).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, யூன் 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, யூலை 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1047/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பது தொடர்பாக 2006.10.25 ஆம் திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமையவும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47உப ஆம் இலக்க, 2007/02/10 ஆம் திகதிய அறிவுறுத்தல்களுக்கமையவும், மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கமைய மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சையில் மேற்படி பதவிக்கு தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்;

(iv) இவர்களில் ஏற்கெனவே மேற்படி நியமனங்களைப் பெற்ற ஆட்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்களும் முகவரிகளும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1144/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களில்,

(i) காயமடைந்தவர்களின் (பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகிய) எண்ணிக்கை;

(ii) தொழில்களை இழந்து நாடு திரும்பியர்களின் எண்ணிக்கை;

(iii) நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளவர்களின் எண்ணிக்கை;

(iv) 2005 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் ஏதேனுமொரு நிவாரண வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1164/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த மாணவர்களின்/மாணவிகளின் பெயர்கள் மற்றும் வகுப்புத் தடை செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இவர்களில் முறையான விசாரணை நடத்தப்பட்டு இறுதி முடிவு வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஏனைய மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1177/ '11

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 டிசம்பர் 10 ஆம் திகதி ஐ.நா. வதிவிட இணைப்பாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் சட்ட பீடம் மற்றும் மனித உரிமைகள் ஆய்வுக்கான நிலையம் ஆகியவற்றினால் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்வில் 1998 இல் ஐ.நா. மனித உரிமைகள் பரிசு பெற்ற சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ஐ.நா. அந்நிகழ்வை இரத்துச் செய்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே சொல்லப்பட்ட நிகழ்வில் சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்படாதது ஏன் என்பதையும்;

(ii) பல்கலைக்கழகம் ஒன்றில் யார் உரையாற்ற முடியும் என்பதை நிர்ணயிப்பதற்கான கொள்கை ஒன்று உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அக்கொள்கை யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) சிந்தனைச் சுதந்திரத்தையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் வேண்டிநிற்கும் சர்வதேசக் கற்கையும் அறிவும் எவ்வாறு பல்கலைக் கழகங்களில் மேம்படுத்தப்படுகின்றது என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1048/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய மாத்தளை மாவட்டத்தின் நாஉல, வில்கமுவ, கலேவெல, மாத்தளை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 31 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்;

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1149/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை பதிவு செய்வதற்காக அரசாங்கம் அறவிட்ட கட்டணத்தை வருடவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்ற வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) அவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1049/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, நுவரெலியா, ஹங்குரன்கெத்த, கொத்மலை மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 50 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 103, நிகழ்ச்சித் திட்டம் 1,— †2011 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி, 2011 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் சேவைக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியித்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வேறு ஏதேனுமொரு நிதியத்தினால் அல்லது பணத்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உகந்ததைச் செய்யக் கூடியதானவொரு தொகையினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெற்றுக் கொள்ளும் ஏதேனுமொரு கடன் தொகையினால் ரூபா இருபது பில்லியனுக்கு (ருபா. 20,000,000,000) மேற்படாத குறை நிரப்புத் தொகையினைக் கொடுக்க வேண்டியதுடன் அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 103 | - | பாதுகாப்பு அமைச்சு |
| நிகழ்ச்சித் திட்டம் | 1 | - | தொழிற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 2 | - | அமைச்சு நிருவாகமும் நிறுவன சேவைகளும் |

| | |
|---|---|
| ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. 20,000,000,000 |
| மொத்தச் செலவினம் | ரூ. 20,000,000,000 |

(இருபது பில்லியன் ரூபா மட்டும்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2011, யூன் மாதம் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*

நீதி அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 சனவரி 21 ஆம் திகதிய 1689/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.06.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2011, யூலை 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0687/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் மொத்த மின் உற்பத்தியின் அளவையும் அதில் நீர் மின்சாரம் மற்றும் அனல் மின்சாரத்தின் நூற்றுவீதத்தையும்;

(ii) இலங்கை மின்சார சபை (இ.மி.ச) மற்றும் தனியார் துறை ஆகியவற்றினால் உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அளவையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) தவணைக் கொடுப்பனவு, வட்டிக் கட்டணங்கள் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கலாக இ.மி.ச. இற்கு ஏற்படும் மின்சார உற்பத்திச் செலவையும்;

(ii) உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அலகுப் பெறுமதியையும் அதனை தனியார் துறை இ.மி.ச.வுக்கு வழங்குவதற்காக செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் காலப்பகுதியையும்;

(iii) அனல் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவை மேற்கொள்ளத் தவறுதல் பற்றி ஏதேனும் வாசகம் அந்த உடன்படிக்கையில் உள்ளதா என்பதையும்;

(iv) சூரிய வலு மற்றும் காற்று வலுவை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(v) அத்தகைய செயற்பாடுகள் இல்லையெனில், புதுப்பிக்கக்கூடிய அந்த சக்தி மூலங்களை பயன்படுத்தாமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரச துறையினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்;

(ii) தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரம்;

(iii) வர்த்தகத் துறைக்கும் வீட்டுப் பாவனையாளர்களுக்கும் விற்பனை செய்யப்படும் மின்சாரம்

ஆகியவற்றின் அலகொன்றுக்கான சராசரி விலையை அவர் வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0984/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்பத்து சரணாலயத்தில் மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்காக வனப் பாதுகாப்பு திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அந்த உரிமப் பத்திரத்தை வழங்கிய அதிகாரி யார் என்பதையும்;

(iv) அந்த உரிமப் பத்திரம் மூலம் மணல் அகழ்வதற்கு அனுமதி பெற்றுள்ள நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த சரணாலயத்திலிருந்து இதுவரை அகற்றப்பட்டுள்ள மணலின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த மணல் எந்தப் பணிகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1050/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்டை, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1166/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசின் உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தின் மொத்த உர விநியோகஸ்தராக கமத்தொழில், கமநலப் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பு செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்த அமைப்பு உர விநியோகத்தை ஆரம்பித்த வருடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை மேற்கூறிய மொத்த விநியோகஸ்தருக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியினால் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளின் அளவு வருடாந்தம் எவ்வளவு;

(ii) 2009 ஆம் ஆண்டளவில் மேற்படி மொத்த விநியோக்ஸ்தரினால் கமநலச் சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளினதும் அளவு எவ்வளவு

என்பதை அவர் வெவ்வேறாக சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விநியோகஸ்தருக்கு கிடைத்த உரத்தின் அளவுக்கும் விநியோகிக்கப்பட்ட அளவுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் கையிருப்புத் தொகையில் பற்றாக்குறை காணப்படின் அது எவ்வளவு;

(ii) ஒரு மெற்றிக் தொன் உரத்தின் சந்தைப் பெறுமதிக்கமைய பற்றாக்குறையாக உள்ள அந்த கையிருப்புத் தொகையின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்கூறிய நிலமைகளினால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்கூறிய விநியோக்ஸ்த்தர் மோசடி செய்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

1212/ '11

கௌரவ வை.ஜீ. பத்மசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க மத்திய மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையுதம்;

(iii) புதிதாக மத்திய மருந்தகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போதுள்ள மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மத்திய மருந்தகங்களுக்கு மேலதிகமாக ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக தாபிக்கப்பட வேண்டிய மத்திய மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) மத்திய மருந்தகமொன்று தாபிக்கப்படும் போது அமைச்சினால் கருத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோல்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1215/ '11

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சனாதிபதி நிதியத்துக்கு எவ்வாறு நிதி உதவிகள் கிடைக்கின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில்,

(i) சனாதிபதி நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த நிதியத்தினால் வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iii) சனாதிபதி நிதியத்தினால் உதவிகள் வழங்கப்படும் துறைகள் மற்றும் ஒவ்வொரு துறைக்காக வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iv) நிதி உதவிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1302/ '11

கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கிக்குச் சொந்தமான 65-1990, 32-7394, 32-7393 மற்றும் 65-1986 ஆம் இலக்கங்களையுடைய நான்கு வாகனங்கள், ஒரு வாகனத்திற்கு மாதாந்தம் ரூபா.25000/ - வீத வாடகை அடிப்படையில் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களுக்கு ஏற்புடைய வாடகைத் தொகை 2009.10.09 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை நிதி அமைச்சினால் இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விபத்திற்குள்ளாகியுள்ள 65-1986 ஆம் இலக்க வாகனத்திற்கான இழப்பீட்டுத் தொகை இலங்கை வங்கிக்குச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 65-1990 மற்றும் 32-7393 ஆம் இலக்க வாகனங்கள் இரண்டினையும் மீண்டும் இலங்கை வங்கியிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதயும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1213/ '11

கௌரவ வை.ஜீ. பத்மசிறி,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதற்காக ஒரு வருடத்தில் சராசரியாக அனுமதிக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் முன்பள்ளிகளையும் முன்பள்ளி ஆசிரியர்களையும் பதிவு செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறைமையியல் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) முன்பள்ளி ஆசிரிய பயிற்சிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மட்டத்திலான பயிற்சிப் பாடநெறியெதுவும் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1303/ '11

கௌரவ எம் ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கட்டிடத்தை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அக்கட்டிடத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் தலைநகர கிளை அலுவலகமும் வேறு வங்கிப் பிரிவுகளும் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) தற்போது யோர்க் வீதி இலங்கை வங்கிக் கட்டிடத்தில் அமைந்துள்ள அவ்வங்கிக்கு சொந்தமான ஜீ. ஓ. எச். ஹோட்டல் நட்டத்தில் இயங்கிவருகிறதா என்பதையும்;

(iv) அந்நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1216/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியை முன்னிட்டு சுதேச மருத்தவத்துறை அமைச்சு செலவிட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களங்களினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குறித்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவுசெய்த பணத் தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சின் செலவுத் தலைப்பு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1304/ '11

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 சனவரி மாதம் 02ஆம் திகதி முதல் திசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இலங்கை வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேலேயுள்ளவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்களின் பெயர்களும் விலாசங்களும் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2011, யூலை 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0905/ '10

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ்) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சின் செயலாளரது ED/2/29/4/1/46 ஆம் இலக்க 2005.07.19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005.07.28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1174/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிலுள்ள தொல்பொருளியல் ஸ்தலங்கள் அனைத்தும் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி ஸ்தலங்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் வேறு மத ஸ்தலங்கள் என்ற அடிப்படையில் தனித் தனியே இனங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனின், மேற்படி ஸ்தலங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளெவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1214/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் மேம்பாட்டு அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் இருக்கும் விதவைப் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் யுத்தத்தின் காரணமாக விதவைகளாக உள்ள பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனைத்து விதவைப் பெண்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1347/ '11

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆசிரிய சேவைக்குரிய, தற்போது நாட்டினுள் சேவையாற்றும் உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஆசிரியர்களில், மாகாண அரச சேவையிலும் மத்திய அரசின் கீழும் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) முழுக் கல்வி கட்டமைப்புக்கும் தேவையான உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது கல்வித் துறையிலுள்ள உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், உடற் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

1175/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருளியல் இடங்கள் புதைபொருள் கொள்ளையர்களால் நாசமாக்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடங்களை புதைபொருள் கொள்ளையர்களிடமிருந்தும் ஏனைய இடர்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1201/ '11

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004 ஆம் ஆண்டு சுனாமி(ஆழிப்பேரலை) அனர்த்தத்தின்போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 460 வீடுகள் இன்னும் தேவைப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஏறத்தாழ ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்கென மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை பற்றியும்;

(ii) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடமைப்புத்தேவைகள் பூர்த்திசெய்யப் படுவதற்கான ஏதாவது காலக்கெடுவையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1348/ '11

கௌரவ சாந்த பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்பட்ட பயங்கரவாதம் முடிவடைந்த பின்னர் இந்நாட்டிற்கான வெளிநாட்டு பயணிகளின் வருகையில் வளர்ச்சிப் போக்கு அதிகரித்துள்ளதா என்பதையும்;

(ii) முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகளின் வருகையின் வளர்ச்சி எவ்வளவென்பதையும்;

(iii) 2010ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினையும் அதன் ஒப்பீட்டளவிலான வளர்ச்சி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய வழிமுறைகள் யாதென்பதையும்;

(ii) இற்றையளவில் அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இல்லையேல், அதற்குரிய காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1176/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோட்டேயில் தேசிய ஊழியர் சங்கத்தின் தலைமையகம் கொண்டுநடாத்தப்படுகின்ற நிலப் பரப்பு முக்கியமான தொல்பொருளியல் இடமாகும் என்பதையும்,

(ii) மேற்படி நிலப் பரப்பில் கோட்டே இராஜதானிக்கு உரித்தான தொல்பொருளியல் நினைவுச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின் மேற்படி பெறுமதிமிக்க நிலப் பரப்பை விடுவித்து பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1345/ '11

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— சமூகசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திடீர் விபத்தின்போது இரு கால்களிலும் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக நிரந்தர அங்கவீனராக உள்ள, தற்போது நிரந்தர வருமானமின்றி மிகவும் இக்கட்டான நிலையில் வாழ்க்கை நடத்தும் அக்குரஸ்ஸ, கொடபிட்டிய, கொடவத்தையில் வசிக்கும், மூன்று பிள்ளைகளின் தந்தையான திரு. எம்.எஸ்.எம். பஸ்லி, தமக்கு மாதாந்தம் ரூபா 3,000/= நிதியுதவியைப் பெற்றுத் தருமாறு அத்துரலிய பிரதேச செயலாளருக்கு 2010.09.08ஆம் திகதியிட்டு எழுத்து மூலமான வேண்டுகோளை விடுத்துள்ள போதிலும், இதுவரையிலும் அவருக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) நிரந்தர அங்கவீராகக் காணப்படும் திரு. பஸ்லிக்கு 2011 ஜனவரி மாதம் முதல், மாதாந்தம் ரூபா 3,000/= நிதியுதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1349/ '11

கௌரவ சாந்த பண்டார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் சேவையின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தி கிடைப்பதென்பதையும்;

(iii) சில பிரதேசங்களில் சேவைக்காக மேற்படி உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது காணப்படும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நிரப்புவதற்கு எடுக்கப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011, யூலை 08, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0860/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கல்வி அமைச்சரினால், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றதா என்தையும்;

(ii) குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் மாவட்ட மற்றும் கல்வி வலய ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இதன்பொருட்டு நிதி வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை மற்றும் வழங்கும் உணவு யாது என்பதையும்;

(v) இந்த நிகழ்ச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித் திட்டதின் கீழ், பாடசாலைகளுக்கு உணவு வழங்குகின்ற அநேகமான கல்வி வலயங்களில் உணவு வழங்குநர்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதால் இவர்களுக்கு அநீதி நேர்த்துள்ளதென்பதையும், இதனால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடை ஏற்படுவதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவு வழங்குநர்களுக்கு இறுதியாக பணம் செலுத்தியுள்ள மாதம் யாதென்பதையும்;

(ii) தற்போது இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகை அந்தந்த மாவட்டங்கள் மற்றும் கல்வி வலய ரீதியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0880/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லுரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லுரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக் கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக் கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0977/ '10

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/ '10

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்சிஷினீ பெர்னாந்துபுள்ளே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் எனப்படும் சதொச தனியார் மயமாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி அரசாங்கத்தில் சதொச விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்;

(iv) சதொசவை தனியார் மயமாக்கியதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தனியார் மயமாக்கப்பட்டிருந்த சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்;

(iii) சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதியில் விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1150/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் 2010 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் 68 பேர் கடமையாற்றினார்கள் என்பதையும்;

(ii) எட்டு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்கின்ற ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு அமைவாக மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் 30 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்பதையும்;

(iii) புதிதாக இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஏழு பேர் பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) மாணவர்கள் 1500 பேருக்கும் அதிகமானவர்கள் கல்வி கற்கும் மேற்படி பாடசாலைக்கு ஆசிரியர்கள் 72 பேர் அவசியமாக உள்ள போதிலும், தற்போது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 42 மாத்திரமே என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நிலவுகின்ற மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1165/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0874/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஈரானிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட வருடங்களில் ஈரான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட கடன்கள் எந்தக் கருத்திட்டங்களில் இடப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் இடப்பட்ட நிதித்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி கடன்தொகையில் கருத்திட்டங்களில் இடப்படாத தற்போது திறைசேரியில் உள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அல்லது நாட்டுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி கடன்தொகையைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.126/ ’11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்காக “சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்” ஒன்றைத் தாபித்தல்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்கான பத்தாண்டு தேசிய மூலோபாயச் சட்டகம் ஒன்றை வகுத்தலானது, தேசிய ஒருங்கிணைப்புக்கும் சமூக ஒற்றுமைக்குமான ஒரு திருப்புமுனை நடவடிக்கையாக அமையுமெனவும் எனவே சிங்கள மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் குறுகிய கால வளமளித்தல் நிழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுடன் “சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்” ஒன்றில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பறிமாறிக்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு கல்வி அமைச்சும் தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.127/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.128/11

கௌரவ அஜித் குமார,— முன் பிள்ளைப் பருவக் கல்வி தொடர்பில் தேசிய திட்டமொன்றை உருவாக்குதல்,— எமது நாட்டில், பிள்ளைகளின் கல்வியில் முக்கிய இடம் வகிக்கும் முன் பிள்ளைப் பருவக் கல்வியை (முன்பள்ளிக் கல்வி) வழங்குவது தொடர்பில் தேசிய திட்டமொன்றை தயாரிக்கவேண்டியுள்ளதுடன், முன் பள்ளி நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சியும், ஆட்சேர்ப்பு முறைமையுடன் சம்பள முறையொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.129/11

கௌரவ அஜித் குமார,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றைத் தயாரித்தல்,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்கள் பற்றிய பரந்த ஆய்வினை மேற்கொண்டு, அது தொடர்பில் அறிவியல் பெறுமதிமிக்க ஆய்வு நூலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.